




# மகேஸ்வரியம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ் நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் இல.876, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சியை வதிவிடமாகவும் கொண்ட இரு மரபும் தூய தனிநாயக முதலிகள் வழித்தோன்றலில் அவதரித்த

# அமரர் மகேஸ்வரி முருகேசு

அவர்களின் சிவபதப் பேறு குறித்த

# நினைவு மலர்

## 20.04.2022

(முதலாம் ஆண்டு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் ஆணிவேராய்....
எங்கள் வாழ்க்கையின் அச்சாணியாய்....
எங்கள் எல்லோரதும் மூச்சுக்காற்றாய்...
எங்கள் கண் கண்ட தெய்வமாய்...
எங்கள் முன் உலாவிய..
எம் அன்புக் கடவுளுக்கு
சிரம்தாழ்த்தி கரம் கூப்பி
தங்கள் பாதார விந்தங்களுக்கு
இக் காணிக்கை இதழை
சமர்ப்பிக்கின்றோம் அம்மா...

**இதய தாகத்துடன்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாநிலம் மகிழ
04.09.1955

வானகம் போற்ற
30.04.2021

# அமரர்
# முருகேசு மகேஸ்வரி

**இல.876, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி.**

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு பிலவவில் ஆன மாதம் சித்திரையில்
நீண்ட அபரபக்க சங்கடகர சதுர்த்தியில்
மண்விட்டு சென்ற மகேஸ்வரி என்னும் உத்தமி
நின்ற இறையடி நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்
விநாயகனே விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம்
தன்மையினால் கண்ணிற் பணிமின் கனிந்து

தேவாரம்

நாமார்க்குங் குடி அல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்படடோம் நடலை பயில்வோம்
ஏமாப்போம் பிணி அறிவோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை
தாம் ஆர்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழை ஓர் காதிற்
கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம் மலர்ச்சே வடி இணையே குறுகினோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை யெல்லாமுங்
குன்றே அனையாய் என்னையாட்
கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ!
அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவு பெற்றேன் பெற்ற
தார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கினையோனே கதிர்காமப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் முருகேசு மகேஸ்வரி அவர்களின் வாழ்க்கைச் சுவடுகள்

இயற்கை எழில் மிக்க இலங்கைத் திருநாட்டின் வடக்கே அமையப்பெற்ற நெடிய தீவாம் பசுந்தீவு என்னும் நெடுந்தீவு, ஆவினமும் பரிகளும் பச்சிலை பல கொண்ட மூலிகைத் தாவரங்களும் ஒருங்கே கல்வி வளமும் பெருகி சிறந்து விளங்கும் கிழக்கே உயர் சைவ வேளாளர் குலத்தின் தனிநாயகம் முதலி பரம்பரையின் வழித்தோன்றலான அமரர்களான சுப்பிரமணியம் பார்பதிப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியாக அமரர் மகேஸ்வரி அவர்கள் 1955.09.04 இல் இப்புவிதனில் அவதரித்தார். இவருடன் உடன் பிறந்த சகோதரர்களாக வேலாயுதம் (அமரர்) இராஜேஸ்வரி, கருணாநிதி, யோகேஸ்வரி (அமரர்) குணேஸ்வரி என்பவர்கள் அமையப் பெற்றனர்.

சிறுவயதில் இருந்தே சகோதரர்கள் அன்பும் பண்பும் ஒற்றுமையும் நிறைந்தவர்களாகவே வளர்ந்து வந்தனர். "திரை கடல் ஓடியும் திரவியம் தேடு" என்பதற்கமைய பெற்றோர் 1956 இல் படித்த வாலிபர் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் காணி கிடைக்கப்பெற்றதன் விளைவாக அமரர் அவர் களும் வட்டக்கச்சியில் பெற்றோர், சகோதரர்களுடன் மகிழ்ந்து குலாவி வாழ்ந்து வந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை யாழ்/ கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்திலும் தொடர்ந்து இடைநிலைக் கல்வியை வட்டக்கச்சி தெற்கு அ.த.க. பாடசாலை யிலும், வட்டக்கச்சி மேற்கு அ.த.கபாடசாலையிலும் பயின்றார்.. கல்வியிலும் விளையாட்டிலும் அதீத ஆர்வத்துடன் பங்குபற்றி சிறந்த தலைமைத்துவப் பண்பினை சிறுவயது முதற்கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்து வந்தார். குடும்ப பொறுப்பும் சகோதரர்கள் மீது அளவு கடந்த அன்பும் கொண்ட அமரரவர்களுக்கு திருமண வயதை எட்டியதும் பெற்றோர் 1976 ஆம் ஆண்டு தம் குலத்து உதித்த உயர் சைவ வேளாளர் குலத்தின் தனிநாயக முதலி வழித் தோன்றலான அமரர்களான கணபதிப்பிள்ளை சேதுப்பிள்ளை தம்பதியினரின் ஆறாவது புதல்வனான முருகேசுவை திருமணம் புரிந்து வைத்தனர்.

இல்லறத்தை இனிதே ஏற்று இன்புற்று வாழ்ந்ததின் பயனாக அனுஷந்தினி, சுதர்சன், ரதிதேவி, சுரேந்திரன் ஆகிய நால் வரையும் பிள்ளைச் செல்வங்களாகப் பெற்று அகமகிழ்ந்தார். பிள்ளைகளின் உயரிய நலனில் அதீத அக்கறையும் பொறுப்பும் கொண்ட அமரரவர்கள் பிதிர், தெய்வம், விருந்து, இனம், தான் என்ற ஐந்து வகைகளுக்கும் தர்மம் செய்து இல்லற வாழ்வில் சிறப்பு பெற்றார். தன் சுற்றத்தவர்களுடனும், அயலவர்களுடனும் முக மலர்ந்து இனிய சொற்களுடன் கலந்துரையாடுவதுடன் அவர்களுக்கு வேண்டிய தேவைகளை நிறைவேற்றும் சுபவாமும் கொண்டவர். விவசாயம், விலங்கு வேளாண்மை, மற்றும் சுய தொழில் முயற்சிகளிலும் ஈடுபட்டு செல்வம் சேர்ப்பதிலும் தன் குடும்பத்துடன் தன் சார்ந்தவர்களுக்கும் உதவி புரிந்து பகிர்ந் துண்ணும் விருந்தோம்பலின் பேரிலக்கணமாகத் திகழ்ந்தவர்.

சிறியவர் முதல் பெரியர் வரை 'மகேசக்கா' என்று செல்லமாக அழைக்கப்படும் நற்குணவதி சிறந்த பெண் விவசாயி யாக வாழ்ந்து காட்டியவர். கால்நடையாக நடந்து தனது விவசாயப் பணிகளை மேற்கொண்டவர். இவரது வேக நடைக்கு நிகர் இவரேதான். 'தர்க்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத் தால் காணப்படும்'' என்பதற்கமைய எல்லாப் பிள்ளைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பிலும் – பண்பிலும் – அறிவிலும் சிறந்தவர்களக வளர்த் தெடுத்தார். மூத்தமகளான அனுஷந்தினி என்பவரை சுகாதாரத் துறையில் குடும்ப நல உத்தியோகத்தராக சேவையாற்ற உறு துணையாயிருந்தார். இரண்டாவது மகனான சுதர்சனை பேராதனை பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பினை தொடர வைத்து நாட்டு சூழ்நிலை காரணமாக வெளியூரான லண்டனில் வாழ்வதற்கு ஊன்றுகோலானார். மூன்றாவது மகளான ரதி தேவியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை தொடரவைத்து பல்துறையிலும் சேவையாற்றக்கூடிய ஆளுமை யுடன் வளர்த்தெடுத்தார். கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் பெண்கள் அபிவிருத்தி அலுவலராக சிறந்த சமூக சேவையாற்று வதற்கு அடித்தளமிட்டார். இளைய மகனான சுரேந்திரன் நாட்டுச் சூழ்நிலை காரணமாக பல துன்பியல் நிறைந்த சவால்களுக்கு முகம் கொடுத்திருந்தாலும் உயர்கல்வி வரை கற்பித்து முல்லைத் தீவில் தனியார் போக்குவரத்து துறையில் நேரக்கண்காணிப் பாளராக கடமையாற்ற பக்க பலமாக இருந்தார்.

இவ்வாறு தனது குடும்பத்துடன் சகோதரர்களின் திருமண விடயங்களிலும் அவரக்ளது பிள்ளைகளின் நலனிலும் அதீத அக்கறையும் பற்றும் உடையவராக அமரர் திகழ்ந்தார். என்பது சந்தேகமன்று சகோதர வழி வந்த மைத்துனர்களாக தவமலர் (அமரர்) இளைய தம்பி (அமரர்) தயாநிதி (வட்டக்கச்சி) கனகரத்தினம் (இராமநாதபுரம்) சண்முகராஜா (பெரியகுளம்) என்பவர்களையும் கணவர் வழி மைத்துனர்களாக கனகரத்தினம் (அமரர்) நாகலிங்கம் (மீசாலை) பொன்னம்மா (வட்டக்கச்சி) பொன்னுத்துரை (கனடா) சோமசுந்தரம் (அமரர்) கமலமலர் (மிருசுவில்) என்போரையும் பெற்று பேருவகை கொண்டார்.

வருவோர் போவோர் எல்லோருக்கும் ஆதரவு வழங்கும் ஆல விருட்சமாக வாழ்ந்த அமரர் அவரக்ள் பிள்ளைகள் திருமண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதை எட்டியதும் மூத்த மகளான அனுஷந்தினி என்பவருக்கு உயர் சைவ வேளாளர் குலத்துதித்த அனலைதீவைப் பூர்வீக மாகக் கொண்ட சண்முகநாதன் – நாகேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனான அன்பிலும் பண்பிலும் சிறந்த சதீஷ்குமார் (உரிமையாளர் – நியூ சண்முகா ஜீவல்லறி, யாழ்ப்பாணம்) என்ப வரை இல்லறத்துணையாக கரம்பற்றச் செய்தார். இரண்டாவது மகனான சுதர்சனுக்கு உயர் சைவ வேளாளர் குலத்துதித்த மண்டை தீவை தாயகமாக கொண்ட திருநாவுக்கரசு கலாவதி தம்பதி களின் சிரேஷ்ட புதல்வியான நற்குணவதி சுபாஜினி (லண்டன்) அவர்களையும், இளைய மகனான சுரேந்திரனுக்கு உயர் சைவ வேளாளர் குலத்துதித்த கோண்டாவிலை பிறப்பிடமாகக் கொண்ட மகேஸ்வரன் (அமரர்) கோமதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியான நல்லுள்ளமும் நற்பண்பும் கொண்ட சுமித்திரா (திருவையாறு) அவர்களையும் திருமணம் புரிந்து வைத்து தமது மருமக்களாக்கி இன்புற்று வாழ்ந்தார்.

பிள்ளைகளின் இல்லற வாழ்வின் நல்அறப்பயனாக கிடைக் கப்பெற்ற மக்கட் பேறுகளில் அன்பும் பண்பும் அழகும் கொண்ட பேரக்குழந்தைகளாக துசிதா, துசான், ஆரவி, கேனுஷி, கேஷகி, சைறகி ஆகியோரைப் பெற்று அவர்களின் மழலை மொழி கேட்டு மனம் பூரிப்படைந்திருந்தார்.

இவ்வாறு சகல கடமைகளையும் சரிவரச் செய்த அமரர் அவர்கள் இளைய மகளின் திருமணக் கனவுகளோடு முதுமையில் காலெடுத்து வைக்கும் தருணத்தில் ஆண்டவன் 'நரம்புத்தளர்ச்சி' என்னும் அம்பு எய்து இரண்டரை வருடங்கள் உடல் உள நலனுக்கு ஊறு விளைவித்த போதும் தன்னம்பிக்கையை தளரவிடவில்லை. யாழப்பாணம், வட்டக்கச்சி, திருவையாறு என பிள்ளைகள் எல்லோரது வீட்டிலும் மாறி மாறி வாழ்வியல் தடங்களை பதித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றவர் உறவினர் எல்லோருக்கும் பக்க பலமாகவே வாழ்ந்தார். இருந்தும் காலன் தன் பாசக்கயிற்றை பலமாக வீசிட 2021.04.30 அன்று வெள்ளிக்கிழமை சங்கடகர சதுர்த்தியில் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த மகேஸ்வரி என்னும் புனிதை சுமங்கலியாக இறைவன் பாதம் பற்றி அமரத்துவம் அடைந்தார்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**கடன் தீர ஒரு தெய்வீக ரகசியம்**

அனுஷம், அச்சுவினி நட்சத்திரத்தில் லக்கினத்தில் சந்திரன் இருக்கும் நேரத்திலும் செவ்வாய், ஞாயிறு, சனிக்கிழமை களில் நவமி, சதுர்த்தி, சதுர்த்தசி திதிகளில் ஏதாவது உள்ள நாளில் குளிகன் உதயமாகும் நேரத்திலும், சனிப்பிரதோச காலத்தில் சரலக்னத்திலோ சூரிய சந்திர கிரணம் ஏற்பட்டு கிரணம் விலகும் சமயத்திலோ வாங்கிய கடனில் சிறு தொகையைக் கொடுத்தாலும் கடன் தொகை எவ்வளவு அதிகமாக இருந்தாலும் முழுக் கடனும் தீர்ந்து விடும்.

**பேறுகள் பதினாறு**

**புகழ், கல்வி, வீரம், வெற்றி, நல்ல மக்கட் பேறு,**
**துணிவு, செல்வம், நாணயம், சுகம், யோகம், அறிவு,**
**அழகு, பெருமை, நல்ல குடி, உடல் நலம், நீண்ட ஆயுள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகள் சில.....











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சு விட்டகலாத நினைவுகளுடன்...

ஆண்டு ஒன்று ஆனதம்மா... உங்கள்
அரவணைப்பை தவற விட்டு...
ஆலமரம் சாய்ந்ததனால்
ஆடிப்போய் நிற்கின்றோம் தாயே ...... இங்கு நாம்
ஊனை உருக்கி பாலூட்டினாய்... அம்மா...!
வியர்வை சிந்தி செல்வம் ஈட்டி
வளர்த்தெடுத்தாய் எம்மை ... இன்று
துடுப்பிழந்த படகாய் வாழ்க்கை எனும்
நடுக்கடலில் தத்தளிக்கின்றோம்.. அம்மா!
எம்மை வளர்த்து ஆளாக்க... நீங்கள்
பட்ட பாடும் – சுமந்த சிலுவைகளும்
எம் கண்முன்னே நிழலாடுதம்மா...!
வார்த்தைகள் போதாதம்மா உங்கள்
வாழ்க்கைப் பயணத்தில்– "பாசிபடர்ந்த காலங்கள்"
நால்வர் நாம் நான்கு தூண்களாகி
நல்லபடி உங்களை வாழ வைக்க
காலெடுத்து வைக்கையில்
காத்திருந்த காலனும்
வீசி எறிந்திட்டான் பாசக் கயிற்றை உங்களுக்கு
பாவிகளாகிப் பரிதவிக்கின்றோம் தாயவளே ... இங்கு நாம்
உங்கள் பணி சீராய் செய்தீர்கள்... ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் உங்களுக்கு பணி செய்ய தவறிவிட்டோம் தாயே....
அனலிடை அகப்பட்ட என்பிலி போல
துடிக்கின்றோம் அம்மா உங்கள் நினைவால்
திசை அறியா நடுக் காட்டில் – உங்கள்
முகவரி இழந்து தவிக்கின்றோம் தாயே – தங்கள்
கடின உழைப்பால் எம்மை வளர்த்து
கல்வியும் செல்வமும் பெற வழிசெய்தீர்கள்.... அதனால் தானோ
வெகுவிரைவில் உடல் பலவீனமடைந்து
மௌனித்து வீட்டீர்கள் அம்மா.....!

**என்றும் பிரிவால் வாடும்**
**உங்கள் பிள்ளைகள்**
**அனுஷா, சுதன், நிஷா, சுரேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளின் நிழல்களாய்.....

எம்மோடு ஆசையாய் பிணைந்திருந்து
அன்போடு அறுசுவையும் அறிவுமூட்டி
எம்மை அரவணைத்த ஆசை அம்மம்மாவே – உங்களை
பன்னிரு மாதங்கள் கடந்தும்
நம்ப மறுக்கும் எம் மனதுடன்
வழிமேல் விழி வைத்து உங்கள் வரவைக் காண
ஏங்கித் தவிக்கும் ஈர விழிகளுடன்
எங்கும் தேடுகின்றோம். அன்பு அப்பம்மாவே...!
இளையவர் நாம் என் செய்வோம்..
எம்மைப் பார்க்க வருவீர்கள்
என்றெல்லோ எண்ணியிருந்தோம்..
அதற்குள்ளே உங்கள் உயிர்
பறிக்கப்பட்டதும் ஏனோ..!
எமக்கு பிடித்த உங்களை
காலனுக்கும் பிடித்து போனதாலோ...!

**என்றும் உங்கள் நினைவுகளுடன்**
**உங்கள் பேரப்பிள்ளைகள்**
**துசிதா, துசான், ஆரவி, கேனுஷி, கேசகி, சைறஹி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிவும் பணிவும்

'மகேஸ் அக்கா' ஒரு புன்சிரிப்புடன் ஓடி ஓடி திரியும் ஒரு கள்ள மற்ற இதயம் துன்பங்களும் துயரங்களும் சுமந்த வாழ்வில் அதில் எதனையும் வெளிக்காட்டாது மகிழ்ச்சியை மட்டும் மற்ற வர்களுடன் பகிர்ந்து கொண்ட ஒரு தாய். குடும்பம் என்பதில் பல் எதிர்பார்ப்புக்கள் இருந்தன. அதில் எல்லாம் நிறைவடைந்து வாழும் வாழ்வு கிடைக்காத போது சோர்வடைந்து ஒதுங்கிக் கொள்ள அவர் தய்ார் இல்லை. பதிலாக அந்த சவால்களை எப்படி முறியடித்து முன்னேற வேண்டும் என்பதினை நடைமுறையில் நிரூபித்துக் காட்டியவர்.

வீட்டில் மூத்தவர் என்பதால் வீட்டுக்கு வழிகாட்டி யாகவும் குடும்பத்தின் தலைவர் என்பதால் தன் குடும்பத்தையும் ஒரே நேரத்தில் வழிநடாத்தி சென்றவர். அவரது கடின முயற்சி யால் மூத்த மகன் அவர்கள் பக்கபலமாக இருந்தார்.. பிள்ளை களிடம் குடும்ப நெருக்கடிகளை வெளிப்படுத்தி அவர்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ள வேண்டும் அதனூடாகவே ஒரு குடும்பம் வெற்றி பெற முடியும் என்பதினை அவர் நடைமுறை யில் நிரூபித்துக் காட்டியவர். வீட்டுத் தேவை, பொருளாதார தேவை என்ற இரண்டு தேவைகளையும் அவர் திறமையுடன் எதிர் கொண்டார். அதனால் நல்ல பிள்ளைகளை அவர்கள் வசதியுடன் வாழும் ஒரு காலத்தையும் அவர் கண்ணால் காண முடிந்தது. பெண் பிள்ளைகள் இருவரையும் அரச சேவைக்கு தயார்படுத் தினார். ஆண் பிள்ளைகளை காலத்தின் தேவைகருதி வாழக் கூடிய தந்திரத்தை பிரயோகித்தார். அவர்கள் இன்று அவரது அபிலாசைகளை பூர்த்தி செய்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல் மருமக்கள், பேரப்பிள்ளைகளின் அன்பில் கலந்திருந்த அவருக்கு விரைவாக மரணம் வரும் என யாரும் எதிர்பார்க்கவிலை. வட்டக்கச்சியில் நிகழும் அனைத்து இன்ப துன்பங்களிலும் முன்னின்று ஓடோடி பணிபுரியும் இவரது இழப்பு இப்பிரதேசத்திற்கு பாரியதாகும். உற்றார், உறவினர் உடன் பிறந்தோருக்கும் இவரது இழப்பு வேதனைக்குரியது. "என்னால் சாதிக்க முடிந்ததை ஒரு பெண் என்பதற்கு அப்பால் சாதித்து காட்டியுள்ளேன்". என்ற உங்கள் பகிர்வு எனக்கு ஞாபகம் வருகிறது. அந்த துணிவும் கம்பீரமும் மற்றவர்களுக்கும் ஒரு முன்மாதிரியாக அமையும் என நினைத்து ஆறுதல் அடைவோம் மகேஸ் அக்கா நீங்கள் சென்று வாருங்கள்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**அமரசிங்கம் கேதீஸ்வரன்**
**பிரதித்திட்டமிடல் பணிப்பாளர்**
**மாவட்டச் செயலகம்**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.,
M.Ed, B.A, PGDE(Me), Sp.Tr(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
552, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
☎ :021 2280024 021 2222595,
:021 2280024 021 2222595,
:077 6953244
: shritharanmp@gmail.com
: www.shritharan.com

පාර්ලිමේන්තුව
**பாராளுமன்றம்**
**PARLIAMENT**

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed, B.A, PGDE(Me), Sp.Tr(Ag)
Jaffna Electoral District
552, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
☎ :021 2280024 021 2222595,
:021 2280024 021 2222595,
:077 6953244
: shritharanmp@gmail.com
: www.shritharan.com

2022.04.11.

**அன்பும், பொதுநலமும் நிரம்பப்பெற்றவர்.**

யாழ்ப்பாண மண்ணின் நெடுந்திவைப் பூர்விகமாகவும், இல. 876, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சியை வாழ்விடமாகவும் கொண்டு வாழ்வின் இறுதிக் கணம் வரை தன் குடும்பத்திற்காக உருகிக் கரைந்த குடும்பத் தலைவியாக, ஊரின் ஒவ்வோர் உயர்வுக்கும் தன் உழைப்பை நல்கிய சேவகியாக, என் மனதிற்கு நெருக்கமான அயலவராக வாழ்ந்திருந்த மகேஸ் அக்காவின் (திருமதி மகேஸ்வரி முருகேசு) இழப்பு, அவர் சார்ந்த அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பே! நல்ல மனைவியாய், தன் நான்கு பிள்ளைகளுக்கும் சிறந்த தாயாய், தனக்கான கடமைகள், பொறுப்புக்களிலிருந்து ஒருபோதும் விலகியிராத இவர், வட்டக்கச்சி மண்ணின் வளர்ச்சியிலும், அதுசார்ந்த பொதுப் பணிகளிலும் தன்னலமற்று ஈடுபட்ட பொதுநலவாதியாக தனக் கென்றோர் ஆளுமைமிக்க அடையாளத்தை உருவாக்கியிருந் தார். வட்டக்கச்சியை அடையாளப்படுத்தவும் எம் ஊரின் இளைஞர் களை ஒன்றிணைக்கவும் உருவாக்கப்பட்ட கலைவாணி வளையாட்டுக் கழகத்தின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் மகேஸ் அக்காவின் பங்கு காத்திரமானது. நான் கலைவாணி விளை யாட்டுக் கழகத்தின் தலைவராக இருந்தபோது, கிளிநொச்சி மாவட்டத்தின் அடையாளமாக, எமது பாரம்பரியத்தைப் பறை சாற்றும் வகையில் வட்டக்கச்சியில் சவாரித்திடல் ஒன்றை நிறுவும் முயற்சியில் ஈடுபட்டிருந்த போது, தனது சொந்தக் காணியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரை ஏக்கரை சவாரி விடந்தையாக பயன்படுத்துமாறு ஒதுக்கித் தந்த, எவர்க்கும் வாய்க்காத இவரது மனம், தனது மண்மீது கொண்டிருந்த ஆழ்மன விருப்பின் வெளிப்பாட்டால் அமைந்ததே!

அந்த அளவுக்கு எம் ஊருக்கென்றோர் அடையாளத்தை உருவாக்க வேண்டுமென்ற உணர்வு கொண்ட ஓர் பெண் ஆளுமை இவரிடத்தே இருந்தது, அன்பு, அடுத்தவர்க்கு உதவும் பண்பு என்பவற்றுக்கு அப்பால் யாருக்கும் பயமற்று எதையும் நேருக்கு நேர் சொல்லிவிடுகின்ற நெஞ்சுரம் என்பவை இவரது தனிமனித ஆளுமைப் பண்புகளின் வெளிப்பாடே.

அன்பும் அறனும் தன் இதயத்தில் சுமந்த சமூக சேவகியாக, நல்லதொரு குடும்பத் தலைவியாக விளங்கியதனூடு எம் எல்லோர் மனங்களிலும் இருந்தும் உயிர்வாழும் பெரும்பேறு பெற்ற தெய்வப் பிறவியாய் வாழ்ந்து மறைந்த அமரரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது கணவர், பிள்ளைகள் மற்றும் உறவுகளின் துயரில் நானும் பங்கெடுப்பதோடு மகேஸ் அக்காவின் ஆத்மா அமைதி பெற இறையடிகளை இறைஞ்சிகின்றேன்.

**சி.சிறீதரன்,**
**பாராளுமன்ற உறுப்பினர்.**
**ஆறுமுகம் வீதி,**
**வட்டக்கச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்த மகேஸ்........
# (அமரர் திருமதி முருகேசு-மகேஸ்வரி)

இந்து சமுத்திரத்தின் முத்து என வியக்கப்படும் இலங்கைத் திருநாட்டின்–வடபால் சப்த தீவுகளில் பெரியதும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததுமான நெடுந்தீவில் 1955 ஆம் ஆண்டு சுப்பிரமணியம் பார்பதிப்பிள்ளை தம்பதியினருக்கு மூத்த புதல்வியாக மகேஸ்வரி அவர்கள் பிறந்தார். 1956 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுப்பிரமணியம் தனது குடும்பத்துடன் சிறிய வளான மகேசையும் வளமான ஊரான வட்டக்கச்சிக்கு கொண்டு வந்தார். ஆரம்பகாலத்தில் பல சுப்பிரமணியங்கள் எமது வட்டக்கச்சியில் வசித்து வந்தார்கள்.

அமரரின் தந்தையார் மிடுக்கானவர். பேச்சாற்றல் உள்ளவர். கண்ணியமானவர் கட்டையான தோற்றம் உள்ளவர். இதனால் அவருக்கு இரண்டு இஞ்சி மணியம் என்ற பட்டப் பெயருடையவர் தந்தை போலவே மகேசும் கட்டையானவர் மிடுக்கானவர் பேச்சாற்றல் மிக்கவர் நினைத்ததை சாதிக்க வல்லவர் இவரது சுதேச பூமி வட்டக்கச்சி மண்தான்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்ற வள்ளுவனின் வாய் மொழிக்கமைய மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் இல்லாது சீரிய வாழ்வு வாழ்ந்து உலகுக்கு நல்லவராக அனைவராலும் மகேசக்கா என்று செல்லமாக அழைக்கப்பட்டவரே அமரர் அவர்கள். இவர் இளமைக் கல்வியை இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையில் கற்றவர் துணிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைப்பவர் மற்றவர்களுக்கு மதிப்பளிக்கும் பக்குவமுடையவர் இவர் அமரத்துவம் அடையும் வரை எவருடனும் முரண்பட வில்லை. வட்டக்கச்சி மண்ணையும் உறவுகளையும் நண்பர் களையும் நேசித்த மங்கை.

நல்ல மதப்பற்றுள்ளவர். இவரின் வீட்டிற்கு வடக்கே அருள்மிகு கந்தசுவாமி கோவிலும் தெற்கே கண்ணன் கோவி லும் உண்டு. இவர் ஆலயங்களில் தாமாக முன்னின்று பல பொதுத் தொண்டுகளை புரிந்தவர் திருவெம்பாவை, திருக்கார்த்திகை, திருப்பாவை, கந்தசஷ்டி கௌரிகாப்பு என எந்த விரத நாட்க ளிலும் இவரின் பிரசன்னமும் பஜனைப்பாடல்களும் ஆலயங்களில் மேற்கொள்ளப்படும். அருள்மிகு கந்தசுவாமி கோவிலில் அற நெறிப்பாடசாலை ஆரம்பமான காலத்தில் ஞாயிற்றுக் கிழமை களில் சிறுவர்களுக்கு பிரசாதம் தயாரித்து வழங்கி சிறுவர் களுக்கு அறநெறிக் கல்விக்கு உதவிபுரிந்தவர்.

மேலும் ஆலய கும்பாபிசேக தினங்களில் பூமாலைகள் பூக்கள் சகிதம் வருகை தருவார். கண்ணன் கோவிலில் திருப்பாவை காலங்களில் சச்சி அக்காவுடன் இணைந்து அதிகாலை மூன்று மணியளவில் கோவிலில் பிரசன்னமாகி விடுவார். அத்துடன் ஊரில் மாதர் அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி பொதுவேலைகள் எல்லாவற்றிலும் முன்னின்று செயற்படுவார்.

இவருக்கு 1976ம் ஆண்டு இதே ஊரைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சேதுப்பிள்ளை தம்பதிகளின் ஆறாவது மகனான முருகேசுவை பெற்றோர் திருமணம் புரிந்து வைத்தனர். இல்லறவாழ்வில் இரு ஆண்பிள்ளைகளையும் இரு பெண் பிள்ளைகளையும் பெற்று சிறந்த கல்வியறிவூட்டி மக்களை அவயத்துள் முன்னிருக்கச் செய்த பெருமைக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாவார் தன் குடும்பத்துடன் ஊரவர்களுக்கும் தன்னால் இயன்ற உதவியை ஓடி ஓடி செய்யக்கூடிய சுபாவமுடைய புனிதவதி தான் மகேஸ். இறுதிக் காலத்தில் நோயின் தாக்கத்துக்கு உட்பட்டு அவரது 66 ஆவது வயதில் இவரை இழந்து விட்டோம். இவரது இழப்பு குடும்பத்துக்கு மட்டுமல்ல எம் சமூகத்துக்கும் பெரும் துயரினை ஏற்படுத்தி விட்டது. அயலவர்களையும் ஊரவர்களையும் மதித்த மாசில்லா புனிதை இறுதிவரை தன்னை மெழுகாக உருக்கி மற்றவருக்கு உதவி புரிந்தார் இருந்தும் வாழ்வின் சுற்றில் மரணம் தவிர்க்க முடியாதது. உறங்குவது போலவே சாவு. உறங்கி விழிப்பது போலவே பிறப்பு. என்பதற்கமைய இவர் இவரது குடும்பத்தில் மீண்டும் பிறப்பெடுத்து வந்து சேருவார் என ஆறுதலடைவோமாக.......

**சிவக்கொழுந்து புவனேஸ்வரன்**
**பிரதேசசபை உறுப்பினர்–கரைச்சி பிரதேசசபை**
**சமாதான நீதவான்**
**வட்டக்கச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பான உடன் பிறவா சகோதரி
## மகேஸ்வரி!

நெடுந்தீவை பிறப்பிடமாகவும் இல – 876 ஆறுமுகம் வீதியை வசிப்பிடமாவும் கொண்ட எனது உடன் பிறவா சகோதரி அமரர் முருகேசு–மகேஸ்வரி அவர்கள் ஒரு தனிசிறந்த குடும்பத் தலைவியாக விளங்கி தனது நான்கு பிள்ளைகளையும் பெரும் சிரமத்தின் மத்தியிலும் சிறப்பாக கல்வி கற்பித்து அவர்களுடைய சொந்தக் காலில் தனித்துவத்துடன் வாழ வழிகாட்டிய பெருமைக் குரிய தாயாவார்.

அமரருடைய அழகான புன்சிரிப்பும் அன்பான செல்லக் கதைகளும் என்றும் எமது மனங்களில் நிலைத்திருக்கின்றது. வட்டக்கச்சியில் நடைபெறும் பொது நிகழ்வுகளில் இவரது பங்கு அளப்பெரியது. நாட்டுச் சூழ்நிலையால் இவரை அவரது இளமைக் காலத்தின் பின் பல வருடங்களின் பின் சந்திக்க நேர்ந்தது அமரர் அவர்கள் நோயுற்ற வேளையிலும் அதே சிரிப்புடனும் அதே செல்லக் கதைகளையும் அப்படியே அவர் முகத்தில் கண்டேன். இன்றும் அதேமுகம் தான் என்னுடைய மனக்கண்ணில் தெரிகின்றது. எனது உடன் பி–றவா சகோதரியின் பிரிவால் வாடி இருக்கும் கணவர் பிள்ளைகளுக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**'ராஜா லட்சுமி '**
**உடன் பிறவா சகோதரி**
**வட்டக்கச்சி, கிளிநொச்சி**

**"தென் புலத்தார் தெய்வம் விருந்தோக்கல் தான் என்றாங்கு**
**ஐம்புலத்தாறு ஒம்பல் தலை"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்த காலங்கள்

எமது குடும்பத்தின் மூத்த புதல்வியாய் குடும்பத்தின் அங்கமாய் எங்களுடன் மகேஸ் வாழ்ந்த காலங்களை மீட்டிப் பார்க்கின்றோம். 'பப்பா – அக்கா' என்று உரிமையுடன் நீ அழைப்பாய்.... 'மகேசக்கா.......... மகேசக்கா...... என்று எனது பிள்ளைகளும் உன்னை அழைத்து வாழந்த காலங்கள் இனிமையானது. நீ திருமண பந்தத்தில் இணைந்து பேரக் குழந்தைகளை கண்டாலும் எமது உறவுகள் தொடர்ந்தன... வளர்ந்தன.. காலன் தனது கடமையை நிறைவேற்றினான். நீ இவ்வுலகை விட்டு நீங்கி விட்டாய் நானும் (பப்பா ) எனது பிள்ளைகளும் உன்னுடைய ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**"குடம்பை தனித்தொழியாப் புட்பதற்தற்றே உடம்போடு உயிரிடை நட்பு"**

**அமரர் குமாரசாமி (பப்பா)**
**கௌரி அக்காவுடன்**
**பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலி.........

காலம் சென்ற திருமதி முருகேசு மகேஸ்வரி என்பவரை நான் நன்கு அறிவேன். இவர் வந்தாரை வரவேற்கும் நற்பண்பும் இறைபக்தியும் உடையவர். பொதுக்காரியங்களில் முன்னின்று உழைப்பர் தனது பிள்ளைகளை சமூகத்தில் நற்பிரஜைகளாகத் திகழ்வதற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர். எப்போதும் அயலில் உள்ளவர்களுடன் நல்லுறவைப் பேணிவந்துள்ளார். இவரின் இழப்பினால் துயருற்றிருக்கும் இவர்கள் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் இவரின் ஆத்மாவை இறைவன் தனது வான் வீட்டில் வைத்து இளைப்பாறுதல் தரவேண்டுமெனவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**நீ. ஜோன் ஜெகநாதன்,**<br>
**229 சில்வா வீதி,**<br>
**வட்டக்கச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்காஷ்டகம்

நான்முகம் திருமால் பூசை  செய் லிங்கம்
தூயசொல் புகழ்பெறும் பேரெழில் லிங்கம்
பிறவிய பெருந்துயர் போக்கிடும் லிங்கம்
வணக்கம் ஏற்க சதாசிவ லிங்கம்

காமனை எரித்த பேரருடள் லிங்கம்
ராவணன் கர்வம் அடக்கிய லிங்கம்
வழிவழி முனிவர்கள் வழிபடு லிங்கம்
வணக்கம் ஏற்க சாதசிவ  லிங்கம்

தீவ்ய மணம் பல கயல்கின்ற லிங்கம்
சித்தம் தெளிவிக்கும் சித்தர்கள் லிங்கம்
தேவரும் அசுரரும் வணங்கிடும் லிங்கம்
வணக்கம் ஏற்க சாதசிவ லிங்கம்

படமெடுத்தாடும் பாம்புணை லிங்கம்
கனகமும் நவமணியும் ஒளித்திடும் லிங்கம்
தக்ஷனின் யாகத்தை அழித்திட்ட லிங்கம்
வணகம் ஏற்க சதாசிவ லிங்கம்

குங்குமம் சந்தனம் பொழிந்திடும் லிங்கம்
பங்கய மலர்களைச் சூடிடும் லிங்.கம்
வந்ததோர் பாவத்தை போக்கிடும் லிங்கம்
வணக்கம் ஏற்க சதாசிவ லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் கணங்கள் போற்றிடும் லிங்கம்
அன்பர்கள் பக்தியை ஏற்றிடும் லிங்கம்
கதிரவன் கோடி கூடர்மிகு லிங்கம்
வணக்கம் ஏற்க சாதசிவ லிங்கம்

சிட்டிதழ் மலருடைய சுட்டிடும் லிங்கம்
எல்லாப் பிறப்புக்கும் காரண லிங்கம்
அஷ்ட தரித்திரம் அகற்றிடும் லிங்கம்
வணக்கம் ஏற்க சதாசிவ லிங்கம்

கராவர் குருவுடன் தொழுதிடும் லிங்கம்
நிரந்தரம் வானத்து மலர்நிறை லிங்கம்
அனைத்துக்கும் மேம்படும் பரம்பொருள் லிங்கம்
வணக்கம் ஏற்க சதாசிவம் லிங்கம்

சிவசந்நிதானத்தில் இதனை உரைப்பார் சிவபதமெய்தியே சிவனோடிருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிக் காப்புத் தோத்திரம்



காப்பு

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடியமகிசாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதி விரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்

சங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொளிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாக் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஒட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரம் சிறப்பதற்கு வீர சக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணபொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதில் எல்லாம் நறுங் காப்பு கட்டதனில்
பூவும் நீரும் இட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப்பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுனை காணுகின்றேன்
காப்பு எனக்கு கையில் உண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையில் இருந்து கண்திறந்து காட்டுமடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லக் கரிதானக் சோதி மிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவியணிவோர்க்கு
சித்தியெல்லாம் தருவாள் சீர்ப்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி யெல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலந்தவறமால்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீராம ஜெயம்
## ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவை
## ஸ்ரீ ஆண்டாள் காப்பு

அன்னவயற்புதுவை யாண்டாள் அரங்கற்குப்
பண்திருப்பாவை பல்பதியம் இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற் பாமாலை பூமாலை
சூழக் கொடுத்தாளைச் சொல்லு

சூடிக்கொடுத்த சுடர்கொடியே தொல்பாவை
பாடியருளவல்ல பலவளையாய் நாடிநீ
வேங்கடவற் கொன்னை வீதி என்ற இம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடி செல்வச்சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய் 1

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத்துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உய்யுமா றெண்ணி உகந்தேலோர் எம்பாவாய் 2
ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய். 3

ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய். 4

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை
தூயோமாய் வந்து நாம் தூமலர்த் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய் 5
புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய் எழுந்திராய்! பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத்து அரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய் 6

கீசுகீசு என்றெங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிர் அரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?
தேசம் உடையாய்! திறவேலோர் எம்பாவாய். 7

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரை போகாமல் காத்துன்னை
கூவுவான் வந்துநின்றோம் கோது கலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஆ என்று ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய். 8
தூமணி மாடத்து சுற்றும் விளக்கெரிய
தூபம் கமழத் துயிலணை மேல் கண்வளரும்
மாமன் மகளே! மணிக்கதவம் தாள் திறவாய்
மாமீர்! அவளை எழுப்பீரோ? உன்மகள் தான்
ஊமையோ அன்றிச் செவிடோ, அனந்தலோ?
ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ?
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோர் எம்பாவாய். 9
நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தராரோ? வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகர்ணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில் தந்தானோ?
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலோர் எம்பாவாய். 10

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருகச் செய்யும்
குற்றமொன்றில்லாத கோவலர் தம் பொற்கொடியே
புற்றரவு அல்குல் புனமயிலே போதராய்
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்வப்பெண்டாட்டி! நீ
எற்றுக்கு உறங்கும் பொருளேலோர் எம்பாவாய். 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனைத்திளங் கற்றெருமை கன்றுக்கு இரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழ நின் வாசல் கடைபற்றி
சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கு இனியானைப் பாடவும் நீ வாய்திறவாய்
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்!
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோர் எம்பாவாய். 12

புள்ளின்வாய் கீண்டானை பொல்லா அரக்கனை
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று
புள்ளும் சிலம்பின காண் போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்துநீர் ஆடாதே
பள்ளிக்கிடத்தியோ! பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோர் எம்பாவாய். 13

உங்கள் புழக்கடை தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின காண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கயக் கண்ணானை பாடலோர் எம்பாவாய். 14

எல்லே இளங்கிளியே! இன்னும் உறங்குதியோ!
சில்லென்று அழையேன்மின் நங்கைமீர்! போதருகின்றேன்
வல்லையுன் உன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதான் ஆயிடுக
ஒல்லை நீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ? போந்தார் போந்து எண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடலோர் எம்பாவாய். 15
நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய
கோயில் காப்பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில் காப்பானே! மணிக்கதவம் தாள்திறவாய்
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே யம்மா! நீ
நேய நிலைக்கதவம் நீக்கலோர் எம்பாவாய். 16

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோபாலா! எழுந்திராய்
கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!
எம்பெருமாட்டி யசோதாய்! அறிவுறாய்!
அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த
உம்பர்கோமானே! உறங்காது எழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்பியும் நீயும் உறங்கலோர் எம்பாவாய். 17

உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்தகோபாலன் மருமகளே! நப்பின்னாய்
கந்தம் கமழும் குழலி கடை திறவாய்
வந்தெங்கும் கோழி அழைத்தன காண் மாதவிப்
பந்தல் மேல் பல்கால் குயிலினங்கள் கூவின காண்
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாட
செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோர் எம்பாவாய். 18

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில் மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கை மேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய் திறவாய்
மைத்தடங் கண்ணினாய்! நீயுன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய்காண்
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்
தத்துவமன்று தகவேலோர் எம்பாவாய். 19

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்!
செப்பமுடையாய் திறலுடையாய் செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்!
செப்பன்ன மென்முலைச் செவ்வாய் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை
இப்போதே எம்மை நீராட்டலோர் எம்பாவாய். 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்
ஊற்றமுடையாய்! பெரியாய் உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்
மாற்றார் உனக்கு வலிதொலைந்துன் வாசற்கண்
ஆற்றாது வந்துன் அடிபணியு மாபோலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோர் எம்பாவாய் 21

அங்கண்மா ஞாலத்தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்கம் இருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணி வாய்ச்செய்த தாமரை பூப்போல
செங்கண் சிறுகச்சிறதே யெம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித் தியனும் எழுந்தாற்போல்
அங்கண் இரண்டும்கொண்டு எங்கள் மேல் நோக்குதியேல்
எங்கள் மேல் சாபம் இழிந்தேலோர் எம்பாவாய். 22

மாரி மலைமுழஞ்சில் மன்னிக்கிடத்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கப் புறப்பட்டு
போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணா! உன்
கோயில் நின்று இங்ஙனே போந்தருளி கோப்புடைய
சீரிய சிங்கா சனத்திருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய். 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று இவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி
சென்றங்கு தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி
கொன்றடச்சகடம் உதைத்தாய் புகழ் போற்றி
கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி
குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல் போற்றி
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்று யாம் வந்தோம் இரங்கேலோர் எம்பாவாய். 24

ஒருத்தி மகனாய் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர
தரிக்கிலா னாகித்தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்து கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோர் எம்பாவாய். 25

மாலே மணிவண்ணா! மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பாடு உடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண்டு இசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலின் இலையாய்! அருளேலோர் எம்பாவாய். 26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப்பறை கொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை உடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவார
கூடி யிருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய். 27

கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்போம்
அறிவொன்றும் இல்லாத ஆயர்குலத்து உன்றன்னை
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்றும் இல்லாத கோவிந்தா! உன்தன்னோடு
உறவேல் நமக்கிங்கு ஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னை
சிறுபேர் அழைத்தனவும் சீறி யருளாதே
இறைவா! நீ தாராய் பறையேலோர் எம்பாவாய். 28

சிற்றஞ்சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றாமரையடியே போற்றும் பொருள்கேளாய்!
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய். 29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கக்கடல் கடைந்த மாதவனை கேசவனை
திங்கள் திருமுகத்து சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட வாற்றை அணி புதுவை
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத்தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்குஇப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்து செல்வத்திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய். 30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவராய சுவாமிகள் அருளிச் செய்த

# கந்தசஷ்டி கவசம்

## காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்கு செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலனருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை

### குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

### நிலைமண்டிலா ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக், கிண்கிணி யாட
மையல் நடஞ்செய்யும் மயில் வாகனனார்
கையில்வேலால் எனைக் காக்க வென்று வந்து
வரவர, வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணபவ வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசங் குசமும்
பரந்தவிழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தென்னைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாஞ்சிவ குகன் தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடையழகும் இணை முழந்தாளும்
திருவடியதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகு டிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்(து) உதவும்
லாலா லாலா லாலா வேஷமும்
லீலா லீலா லீலா வினோத னென்(று)
உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம் பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல், வயிற்றை விளங்குவேல் காக்க
சிற்றிடைய அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின் கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கி சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்ம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடி விழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும் பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பல கலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
பற்று பற்று பகலவன்
தணலெரி தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒரு தலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலை சயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பரு அரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரேழுலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்காய்
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துறவாகவும்
உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமராவதியைக்
காத்துத், தேவர்கள் கடுஞ்சிறைவிடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனிய வேல் முருகா
தணிகாசலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப்பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன்யான் நெற்றியில் அணியப்
பாசவினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குறமகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என் மீதுன் மனமகிழ்ந்தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடன், ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறு உருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக்குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங்கருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர் கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிபொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலெக்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத்மாவைத் துணித்த கையதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமுதளித்த
குருபரன் பழனிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்தாட்கொள் என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பாயுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக் கோரரசே
மயில் நடமிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

**கந்த சஷ்டி கவசம் முற்றிற்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை

வெண்தாமரைக்கு அன்றி நின்பதம் தாங்களன் வெள்ளையுள்ளம்
தண்தாமரைக்குத் தகாது கொலோ சகம் ஏழும் அளித்து,
உண்டான் உறங்க, ஒழித்தான் பித்தாக,உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே! சகலகலாவல்லியே!

நாடும் சொற்சுவை பொருட்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்து அருள்வாய்! பங்கய ஆசனத்தில்
கூடும் பசும்பொற்கொடியே! கனதனக் குன்றும் ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே! சகல்கலாவல்லியே!

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள் அமுது ஆர்ந்து உன் அருட்கடலில்
குளிக்கும் படிக்குஎன்று கூடுங்கொலோ?உளம்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவல் புலவோர் கவிமழைசிந்தக்கண்டு
களிக்கும் கலாபமயிலே! சகலகலாவல்லியே!

தூக்கும் பனுவல் துறை தோய்ந்த கல்வியும்சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்து அருள்வாய்! வடநூல் கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே! சகலகலாவல்லியே!

பஞ்சுஅப்பு, இதம்தரும், செய்ய,பொற்பாதபங்கேருகம்என்
நெஞ்சத்தடத்து அலராதது என்னே? நெடுந்தாள் கமலத்து
அஞ்சத்துவசம் உயர்ந்தோன் செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத்தவிசு ஒத்திருந்தாய்! சகலகலாவல்லியே!
பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்தநல்காய்! எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும்வெங்காலும்,அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்! சகலகலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி உன்கடைக்கண்நல்காய்! உளம்கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம்தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள் ஓதிமப்பேடே! சகல்கலாவல்லியே!

சொற்விற்பன்னமும், அவதானமும், கல்விசொல்லவல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய்!நளின ஆசனம்சேர்
செல்விக்கு அரிது என்று ஒருகாலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப்பேறே! சகலகலாவல்லியே!

சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞானத்தில் தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?நிலம்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு அரசன்னம்நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே! சகலகலாவல்லியே!

மண்கண்ட, வெண்குடைக்கீழாக, மேற்பட்டமன்னரும், என்
பண்கண்ட அளவில், பணியச்செய்வாய்! படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும்,விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ? சகலகலாவல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

## ஆனந்த மனோலயம்

**மணிவாசகரால் தில்லையிலிருளிச் செய்யப்பட்டது**

**அறுசீரடி ஆசிரிய விருத்தம்**

**தீர்த்தோற்சவத்தின்போது**

**பொற்சுண்ணம் இடிக்கும் வேளையில் பாடப்பெற்றது**

திருச்சிற்றம்பலம்

இராகம் – மோகனம்

முத்துநல் தாழம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமகளோடுபல்லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன்அம்மானைபாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந்தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன்சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
. எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ணம் இடித்துநாமே.

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை,
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல்லாம் புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாசவினையைப் பறித்துநின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே.

அறுகெடுப்பார் அயனும்அரியும்
அன்றிமற்றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்(கு)
காடப்பொற்சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெலாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடந்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி மகிழ்ந்து
பொற்சுண்ணம் இடிந்துநாமே.

சூடகந் தோள்வரை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடக மெல்லடி யார்க்கு மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்துநாமே.

வாள்த்தடங்கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கோண்ட நாண்மலர்ந் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுஎன்னம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதரு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே.

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே.

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெருமானைத்தேடி
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்
காடப்பொற்சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைய்மர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பிரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே.

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுதெங்களப்பன்
எம்பெருமான் இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச்சுண்ணம் இடித்துநாமே.

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயிதழுந்துடிப்பச்
சேயிழை யீர் சிவலோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச்சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக் கரும்பின் தெளியைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணம் இடித்துநாமே.

ஆவகை நாமும் வந்தன்பர்தம்மோ
டாட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான் புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்துநாமே.

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிச்சுண்ணம் இடித்துநாமே. 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயன்தலை கொண்டுசெண்டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக்காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே.

வட்டமலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும்பாடி மதியம்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக்கச்சைப் பாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச்சுண்ணம் இடித்துநாமே.

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய் இருள் ஆயினார்க்குத்
துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய் வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்கள்

(தாயாருக்கு தகனக் கிரயை செய்யும் பாடல்)

ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்துபெற்றுப்
பையலென்றபோதே பரிந்தெடுத்துச் – செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திகனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி?

முந்தித்தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்தே
அந்திபகலாய்ச்சிவனை ஆதரித்துத் – தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டு வேன்

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து – முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்தனக்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்?

நொந்து சுமந்துபெற்றுநோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத்தாழாமே – அந்திபகல்
கையிலே கொண்டென்னைக்காட்டாற்றும் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்!

அரிசீயோ நான் இடுவேன்? ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் – உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு?

அள்ளி இடுவது அரிசியோ! தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்? – மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே என அழைத்த வாய்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னை இட்டதீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென் இலங்கையிலே
அன்னை இட்டதீ அடிவயிற்றிலே
யானும் இட்டதீ மூள்க மூள்கவே!

வேகுதே தீயதனில் வெந்து பொடிசாம்பல்
ஆகுமே பாவியேன் ஐயகோ – காகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

வெந்தாளோ சோணகிரி வித்தகா! நின்பதத்தில்
வந்தாளோ! என்னை மறந்தாளோ – சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்துவரம் கிடந்து என்
தன்னையே ஈன்றெடுத்த தாய்!

வீற்றிருந்தாள் அன்னை , வீதிதனில் இருந்தாள்!
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள் – பால்தெளிக்க
எல்லோரும் வாருங்கள் ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ? மாநிலத்தில் – வேண்டா
நமக்கும் அது வழியே நாம் போமளவும்
எமக்கென்ன என்று இட்டு உண்டு இரும்.

போற்றுவார் போற்றட்டும் தூற்றுவார் தூற்றட்டும்
என உன் கடன்பணி செய்தாய்
போற்றட்டும் உன் தன்னலமற்ற நற்செயல் பல
நானிலம் உள்ள மட்டும்
தேற்றுவாய் எம்மையும் நாம்வாழ நல்வழியும் காட்டி
கம் மணி ஒளியாய் வாருமம்ம.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ அநுட்டானம்

விடிவதற்கு ஐந்து நாழிகைக்கு முன் நித்திரைவிட்டெழுந்து கடவுளை நினைத்துத் துதித்து வெளியே போய் மலசலங் கழித்துச் சுத்தம் செய்து ஸ்நானம் பண்ணித் தோய்த்து உலர்ந்த சீலை கௌபீனங்களை அணிந்து திருநீறு பூசி சைவ அநுட்டானஞ் செய்க. சைவ அநுட்டானத்திற்கு உயிராயுள்ளது ஐந்தெழுத்தாற் கடவுளை வழிபடுதலே. இதற்குத் துணையாக உடற் சுத்தியும், உள்ளச் சுத்தியும் வேண்டும். அதாவது ஆணவம், கனமம், மாயையாகிய மும்மலங்களின் வலியை அடக்க வேண்டும். இவற்றிற்கு விபூதி ஸ்நானமும் மந்திர ஸ்நானமுமே முக்கியமானவை. ஆதலாற் சைவ அநுட்டானத்தில் மூன்று பகுதிகளுண்டு. அவை விபூதி ஸ்நானம். மந்த ஸ்நானம். கடவுள் வழிபாடு என்பன. இவைகள் ஒவ்வொன்றுஞ் செய்யுமுன் ஆசமனஞ் செய்ய வேண்டும்.

1. விபூதி ஸ்நானம்

சுத்தமான பாத்திரத்திலே தண்ணீர் நிறைத்துக் கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் இருந்து விநாயகரையும் குருவையும் வணங்கித் தண்ணீரைச் சுத்தி செய்க. எப்படியெனில்.

நீர்ச்சுத்தி - வலகைச் சுட்டு விரல் நடுவிரல்களை மடக்கிக் கொண்டு பெருவிரல் அணி விரல்களுக்கிடையாக இச்சா ஞானக் கிரியா சக்தி வியாபகமான தனது கண்களால், சிவ மந்திரத்தையுச்சரித்துக் கொண்டு தண்ணீரைப் பாக்க. இதனாலே தண்ணீரிலுள்ள குற்றங்கள் தீரும். இது நிரீட் சணம் எனப்படும். நீரீட்சணம் - பார்த்தல். அஸ்திர(பட்)மந்திரஞ் சொல்லிப் பெருவிரல் சுட்டு விரல்களால் நீரைச் சுற்றி நொடித்துக் கவச மந்திரம் உச்சரித்துச் சுட்டு விரல் நுனியினாற் சுற்றுக. இவை முறையே திக்குபந்தனம் அவகுண்டனம் எனப்படும். இவைகள் நீரிலே குற்றங்கள் வராமற் காக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபூதி சுத்தி - திருநீற்றை இடதுகையில் வைத்து அஸ்திரமந்திரத்தினால் (பட்) நீரைத் தெளித்து அதில் ஒரு சிறுகூற்றைப் பெருவிரலணி விரல்களாலெடுத்து இஸ்திர மந்திரத்தால் (உம்பட்) தென்மேற்கு மூலையிலே தெளிக்க.

தென்மேற்கு இராட்சதமூலை எனப்படும். விபூதியிற் குற்றமான பகுதியென அது நீக்கப்படும். முன்போல், நிரீட்சணம் திக்குபந்தனம் அவகுண்டனஞ் செய்து பதினோரு மந்திரங்களையுஞ் சொல்லி அதிலே பதிக்க இதனாலே சிவ சக்தி வடிவமான திருநீற்றிலே சிவசக்தி பதியும்.

விபூதி அணிதல் - எஞ்சிய விபூதியின் ஒரு கூற்றைப் பெரு விரலணி விரல்களால் எடுத்துத் தலைமுதலாக உடம் பெங்கும் பூசி, மற்றொரு கூற்றில் இருதயத்தால் நீர் விட்டுக் கவத்தாற் குழைத்து நடுவிரல் மூன்றினாலும் சிரசிலும் நெற்றியிலும் கொப்பூமிலும் முறையே ஈசானம் முதலிய நான்கினாலும் பூசி, முழந்தாள், புயம் முழங்கை, மணிக்கட்டு, விலா, முதுகு,கழுத்து ஆகிய இடங்களிலே சாத்தியோ சாத மந்திரஞ் சொல்லிப் பூசுக.

எஞ்சிய திருநீற்றிலே தண்ணீர் விட்டுப் பிடித்துக் கொண்டு பஞ்சப் பிரம மந்திரங்களைச் சொல்லிய பின் தலையிலே தெளிக்க.

2. மந்திர ஸ்நானம்

ஆசனமும் பிராணயாமமும் செய்து அனுட்டான தீர்த்தத்தைச் சிவதீர்த்தமாக்கி அதை மந்திரஸ்நானத்தக்காக உபயோகிக்க. சிவதீரத்தமாக்குதல் சிவதீர்த்தகரணமெனப்படும்.

சிவதீர்த்த கரணம் - புருவ நடுவிலே ஞானமயமாகிய அமிர்தமுண்டு. அதை இருதயமந்திரம் சொல்லிச் சுட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரலினால் எடுத்துத் தீர்த்தத்திலே வைத்து மூலமந்திரத்தால் அபிமந்திரித்துத் திக்குபந்தனமும் அவகுண்டனமுஞ் செய்க.

சலத்தை இடக்கையில் விட்டுச் சங்கிதையால் அபிமந்திரித்துத் தலையிலே தெளிக்க.

சலத்தை வலக்கையால் மூடிச் சங்கிதையால் அபிமந்திரித்து இடக்கையிலே சலத்தை விட்டுக் கீழே ஒழுகுகின்ற சலத்தைச் சங்கிதையால் தலையிலே தெளிக்க.

எஞ்சிய சலத்தை வலதுகையில் விட்டு மூக்குக்குக் கிட்டப் பிடித்து அந்தத் தர்த்தத்திலுள்ள சிவசக்தியினாலே சரீரத்திலுள்ள தீவினையைக் கொடத்து வலற்காற் பெருவிரலிலுள்ள ஞானக்கினியில் அஸ்திரமந்திரம் சொல்லி விட்டுக் கைகழுவுக. இதனாலே தீவினையின் பயன் அப்போது மறையும். இது அகமர்ஷணமெனப்படும். (அகம் - பாவம், மர்ஷணம் - கெடுத்தல்)

3. கடவுள் வழிபாடு

1. சிவபெருமான், உமாதேவியார், விநாயகர், சுப்பரிமணியர் ஆகிய மூர்த்திகளுக்குத் தர்ப்பணஞ் செய்க. தர்ப்பணம், திருப்திசெய்தல், எப்படியெனில், இரண்டு கையும் நிறைந்த சலத்தைச் சிவமந்திரத்தைச் சொல்லி மூன்றுமுறை விடுக. சிவமந்திரத்தைப் பத்துத்தரம் சொல்லிச் சிவமந்திரத்தாற் பின்னுந் தர்ப்பணஞ்செய்து சங்கிதையால் ஒவ்வொரு தரமும் உமாதேவியார், விநாயகர், சுப்பிரமணியராயினோர்க்கு ஒவ்வொரு முறையும் அந்தந்த மந்திரத்தால் தருப்பணஞ் செய்க.

2. ஆசமனஞ்செய்து சலத்திலே வைத்த அமிர்தத்தை இருதயமந்திரத்தால் எடுத்துப் புருவநடுவில் ஒடுக்குக. இது தீர்த்தோபசங்காரமெனப்படும். இரண்டு கைநிறையச் சலம்பிட்டுச் சங்கிதையைச் செபித்துச் சூரிய மண்டமல்லிலே வியங்கும் சிவபெருமானுக்குத் தருப்பணஞ் செய்க.

3. வடக்கு முகமாக இருந்து சிவபெருமானது உருவத் திருமேனியாகிய உருத்திர வடிவத்தை நினைத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமூலமந்திரத்தை நூறு முறையேனும் ஐம்பது முறை யேனும் பத்து முறையேனும் இயன்ற அளவு செபித்து. செத்தைக் கடவுளுக்கு ஒப்புக் கொடுத்துத் தோத்திரஞ் செய்க. சலத்தைக் கால்படாத இடத்தில் இடுக.

## சந்தியா வந்தனம்

மாலை, இரவு - இரவு, காலை ஆகிய காலங்களின் சந்திப்பில் செய்யுப்படும் கடவுள் வழிபாடே சந்தியாவந்தனம் எனப்படும். இது சூரியனை வழிபடுதலாகும். நாம் அன்றாடம் தெரிந்தோ, . தெரியாமலோ செய்யும் பாவங்களை மன்னித்து, நல்வாழ்க்கை வாழ்வதற்கு ஆண்டவனிடம் பிரார்த்திப்பதே சந்தியா வந்தனத்தின் உட்பொருளாகும்.

செய்யும் முறை:

1. ஆசமனம் - கடவுளை தியானித்து சிறிது நீரை உள்ளங்கையில் விட்டு அருந்தவும்.

2. மார்ஜனம் - உடலையும், மனத்தையும் தூய்மைப்படுத்த வேண்டி சிறிது நீரை உடல் மீது தெளிக்கவும்.

3. அகமர்சனம் - பல முற்பிறவிகளில் செய்த பாவத்திற்குப் பிராயச் சித்தமாக வேண்டுதல்.

4. சூர்யஅர்க்யம் - சூரிய பகவானைக்குறித்துப் பிரார்த்தனை செய்து நீர் தெளித்தல்.

5. பிரானாயாமம் - அலையும் மனதைக் கட்டுப்படுத்தி மூச்சுப் பயிற்சி செய்து காயத்ரி மந்திரத்தைப் பாராயணம் செய்தல்.

6. உபஸ்தானம் - கருணையும் அருளும் வேண்டி சூரியபகவானிடம் வேண்டுதல்.

## தீட்சை

குரு தன் சீடனுக்குச் செய்யும் அருள் உபகாரம் தீட்சை ஞானத்தை அருளிப் பாவத்தைப் போக்குவது என்பது இதன் பொருள்.

தீட்சை வைபவத்தின் போது குருவின் அருட்பார்வையால் சீடன் ஆணவ மலத்தினின்று விடுபடுகிறான். குரு ஆசீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதித்துத் திருநீற்றைக் கொடுக்கும் போது கெட்ட எண்ணங்கள் நீங்குகின்றன. அவர் தர்ப்பையினால் தீண்டி ஆசிர்வதிக்கும் போது நல்ல எண்ணங்கள் உண்டாகின்றன. அதன் பின் தீட்சை மந்திரத்தை குருசீடனுக்கு உபதேசித்து அருளுகின்றார். ஆகவே தீட்சை பெற்று சைவர்களாக வாழ வேண்டும் என்று உணர்ந்த குறிக்கோளோடு தான் தீட்சை வைபவங்களை நடத்துகிறார்கள்.

1. சமய தீட்சை - சரியை மார்க்கம் தொடங்குமுன் செய்யப் பெறுவது.
2. விசேஷதீட்சை - கிரியா மார்க்கத்திற்கு உரியது.
3. நிர்வாண தீட்சை - யோகத்திற்கும் ஞாயத்திற்குமுரியது.
4. ஸ்பரிஸதீட்சை - குரு, தன் திருக்கரங்களால் சீடனைத் தொடுவது.
5. நயனதீட்சை - குரு, தன் அருட்பார்வையால் சீடனை நோக்குவது.
6. மானசதீட்சை - குரு தன் மனத்தால் சீடனது மனத்தைத் தன் வயப்படுத்துவது.
7. வாக தீட்சை - குரு உபதேசம், நல்ல அருள் வாக்குகளைச் சொல்வது.
8. மந்திரதீட்சை - குரு, சீடனுக்கு மந்திரங்களை உபதேசிப்பது.
9. யோகதீட்சை - குரு, சீடனை இறைவனோடு சேர வேண்டிய யோக முறைகளைச் சொல்லித் தருவது.
10. ஔத்திரி தீட்சை - அக்கினி காரியத்தோடு செய்து சீடனை தூய்மைப்படுத்துவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க...

ஜென்மம் நிறைந்தது
சென்றவர் வாழ்க

சிந்தை கலங்கிட
வந்தவர் வாழ்க

நீரில் மிதந்திடும்
கண்களும் காய்க

நிம்மதி நிம்மதி
இவ்விடம் சூழ்க!

ஜனனமும் பூமியில்
புதியது இல்லை

மரணத்தைப் போல் ஒரு
பழையதும் இல்லை

இரண்டுமில்லாவிடில்
இயற்கையும் இல்லை

இயற்கையின் ஆணைதான்
ஞானத்தின் எல்லை

பாசம் உலாவிய
கண்களும் எங்கே?

பர்ய்ந்து துழாவிய
கைகளும் எங்கே?

தேசம் அளாவிய
கால்களும் எங்கே?

நீ உண்டதென்றது
சாம்பலும் இங்கே

கண்ணில் தெரிந்தது
காற்றுடன் போக

மண்ணில் பிறந்தது
மண்ணுடல் சேர்க

எலும்பு சதை கொண்ட
உருவங்கள் போக

எச்சங்களால் அந்த
இன்னுயிர் வாழ்க

பிறப்பு இல்லாமலே
நாளொன்று இல்லை

இறப்பு இல்லாமலும்
நாளொன்று இல்லை

நேசத்தினால் வரும்
நினைவுகள் தொல்லை

மறதியைப் போல்
ஒரு மாமருந்தில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் தொடு ஆறுகள்
கலங்குவதில்லை

தரை தொடும் தாரைகள்
அழுவதும் இல்லை

நதி மழை போன்றதே
விதியென்று கண்டும்

மதி கொண்ட மானுடர்
மயங்குவதேன்ன!

மரணத்தினால் சில
கோபங்கள் தீரும்

மரணத்தினால் சில
சாபங்கள் தீரும்

வேதம் சொல்லாததை
மரணங்கள் கூறும்

விதை ஒன்று வீழ்ந்திட
செடிவந்து சேரும்

பூமிக்கு நாம் ஒரு
யாத்திரை வந்தோம்

யாத்திரை தீரும் முன்
நித்திரை கொண்டோம்

நித்திரை போவது
நியதி என்றாலும்

யாத்திரை என்பது
தொடர்கதையாகும்

தென்றலின் பூங்கரம்
தீண்டிடும் போதும்

சூரியக் கீற்றொளி
தோன்றிடும் போதும்

மழலையின் தேன்மொழி
செவியுறும் போதும்

மாண்டவர் எம்முடன்
வாழ்ந்திட கூடும்

மாண்டவர் சுவாசங்கள்
காற்றுடன் சேர்க!

தூயவர் கண்ணொளி
சூரியன் சேர்க!

பூதங்கள் ஐந்திலும்
பொன்னுடல் சேர்க!

போனவர் புண்ணியம்
எம்முடன் சேர்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் முக்கிய தொலைபேசி இலக்கங்கள்

- அவசர பொலிஸ் பிரிவு – 119, 011-5717171
- அம்புலன்ஸ் (கொழும்பு) – 110
- பெண்களிற்கெதிரான வன்முறைகள் – 1938
- அரச தகவல் பாதுகாப்பு திணைக்களம் – 1919
- நீர் வடிகாலமைப்புச் சபை – 1939
- போதைப்பொருள் சார்ந்த பிரச்சினைகள் – 1984
- குடியகல்வு மற்றும் குடிவரவு – 1962
- கல்வி அமைச்சு – 1988
- விசாரணை மற்றும் கண்காணிப்பு – 1905
- IMEI மீளாய்வு அலகு – 1909
- விவசாயிகளுக்கான சேவைகள் – 1918
- மனித உரிமைகள் தொடர்பான முறைபாடுகள் – 1996
- வெளிநாட்டு ஊழியர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களது முறைபாடுகள் – 1989
- தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியம் – 1984
- நுகர்வோரின் புகார்கள் மற்றும் ஆலோசனைகள் – 1977
- மொழிகள் சார் பிரச்சினைகள் – 1956
- உளநலம் சார் பிரச்சினைகள் – 021 222 6666
- சட்ட உதவி ஆணைக்குழு – 021 222 4545
- சிறுவர் துஸ்பிரயோகம் – 1929
- பரீட்சை திணைக்களம் – 1911
- உயர்கல்வி அமைச்சு – 1918
- தேசிய உதவி மையம் – 118
- போதனா வைத்தியசாலை விபத்துப்பிரிவு – 011-2691111
- குருதி வங்கி – 011-2695728, 011-2692317, 011-2674799
- செஞ்சிலுவை – 011-2672727



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தீயணைப்பு பிரிவு மற்றும் அம்புலன்ஸ் – 011–2422222, 110
- இராணுவ தலைமையகம் – 011–2432682
- வெடிகுண்டு செயலிழப்பு பிரிவு – 011–2691500, 011–2437515, 011–2330646
- குற்றப்பிரிவு – 011–2691500
- பொலிஸ் தலைமையகம் – 011–2421111
- மின்சார தடை – 011–2466660, 011–4617575
- அவசர சுற்றுலாத்துறை பொலிஸ் – 011–2421052
- தொலைபேசி இணைப்பு – 112
- தேசிய அவசர பிரிவு – 011–2691095, 011–2699935
- விபத்து பிரிவு – 011–2693184
- சென்.ஜோன் அம்புலன்ஸ் சேவை – 011–2437744
- மோசடி பணியகம் – 0112583512
- சட்ட உதவி ஆணைக்குழு – 0112433618
- கொழும்பு போதனா வைத்தியசாலை அம்புலன்ஸ் – 011–2691111
- செஞ்சிலுவை அம்புலன்ஸ் – 011–5555505
- மத்திய பேருந்து நிலையம் – புறக்கோட்டை – 011–2329606
- இலங்கை மின்சக்தி நிறுவனம் – 1910
- விவசாய அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் – 1920
- அவசர அதிவேக பிரிவு – 1969
- இலங்கை மின்சார சபை – 1987
- தேசிய வைத்தியசாலை – 1959
- தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு – 1966
- வீதி அபிவிருத்தி அதிகாரசபை – 1968
- தொழில்துறை ஒழுங்குமுறை ஆணையம் – 1900
- புற்றுநோய் வைத்தியசாலை(மகரகம) – 011–2842052
- கொழும்பு கோட்டை புகையிரத விசாரணை பிரிவு – 011 2434 215



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் சொரிகின்றோம்...!

மலர்வு
03 - 09 - 1955



உதிர்வு
30 - 04 - 2021

யாழ்/ நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும்,
இல: 876, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## முருகேசு மகேஸ்வரி

மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ?
கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்ப்
பூக்களால் அர்ச்சித்து உங்கள்
ஆத்மா சாந்தியடைய
எங்கள் கண்ணீர்த் துளிகளைக்
காணிக்கையாக்குகின்றோம்.

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய அவரது குடும்பத்தாருடன் இணைந்து நாமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!!

சென்னை ஹோட்டல்,
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயக் காணிக்கை

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும்,
இல: 876, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சியை வதிவிடமாகவும் கொண்ட



அமரர்

## முருகேசு மகேஸ்வரி

| | | |
|---|---|---|
| மலர்வு | ஞானத்தின் ஒளி விளக்காய் | உதிர்வு |
| 1955 | தனி சிறக்க வாழ்ந்தவரே | 2021 |
| 09 | நாடி வந்தோர்க்கு நன்மைகள் பல புரிந்தீர் | 04 |
| 03 | நற்செல்வங்களைப் பெற்று | 30 |

நன்றாக வாழ வைத்தீர்
நாடறிந்த உமது புகழ்
நாளெல்லாம் நிலைத்து நிற்கும்
எமது இதயக் காணிக்கை

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நவம், பாலன், இந்திரன் குடும்பத்தினர்


அமுதன் பதிப்பகம், கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

நெடுந்தீவு தூய தனிநாயக முதலி பரம்பரை




* அமரர்களைக் குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

**"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"**

பிலவ வருடம் சித்திரை மாதம் முப்பதாம் திகதி வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் குல விளக்கு, அன்புத் தெய்வம் அமரர் முருகேசு மகேஸ்வரி அவர்கள் நோய் வாய்ப் பட்டிருந்தபோது சிகிச்சையளித்த கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள் தாதியர்கள், மற்றும் அம்மாவின் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு உடன் ஓடிவந்து எமக்கு ஆறுதலளித்த யாழ்ப்பாணம் - வட்டக்கச்சியை சேர்ந்த அயலவர்கள், நண்பர்கள், உறவினர்கள் அத்தோடு அம்மாவின் பூத உடல் யாழ்ப்பாணம் இருந்து வட்டக்கச்சிக்கு எடுத்துவர உதவி புரிந்த அனைத்து நல்லுள்ளங்கள் மற்றும் திணைக்களம் சார் உத்தியோகத்தர்கள், அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்கள், கண்ணீர் அஞ்சலியுடன் பதாதைகள் மூலம் இரங்கல் செய்தி வெளியிட்டவர்கள், உள்ளூர், வெளியூரில் இருந்து தொலைபேசி மூலம் தொடர்புகொண்டவர்கள் லண்டனில் அம்மாவின் இரங்கல் நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் அந்தியேட்டி சபிண்டீகர நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்தவர்கள், தேநீர் மற்றும் உணவு வழங்கியவர்களுடன் இன்று எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அம்மாவின் 01 ஆம் வருட ஆத்மா சாந்தி பிரார்த்தனைகளில் கலந்துகொண்டோருக்கும் எமது ஆத்மார்த்தமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் எல்லாமாக இவ் நினைவு மலரை அழகுற அச்சிட்டு வெளியிட்ட மக்சிக்கோ பதிப்பகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.




**-குடும்பத்தினர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

Print By: Maxico Printers, Kilinochchi. 0763572817

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org